# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 33 March - 2020 Issue -3**


ஆசிரியர் உரை

## இயேசுவை நோக்கி... ஓடும் போது ...

சர்வ ஞானமுள்ள தேவனால் மானிடருக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டு, பரம வாழ்வுக்குப் பாதை காட்டும் பரிசுத்த வேதாகமம் 66 நூல்களைக் கொண்ட நூல்களின் நூலாக உள்ளது. ஒப்பீட்டுக்கு அப்பாற்பட்ட இந்த ஆன்மீக நூல் 3 காலங்களை உள்ளடக்கிய ஒன்றாக இருநதாலும், இது மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படாமல், பொருளினடிப்படையில் **இரண்டு** ஏற்பாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆதியாகமம் – மல்கியா வரையிலான 39 புத்தகங்கள் பழைய ஏற்பாடாகவும், மத்தேயு – வெளிப்படுத்தின விசேஷம் வரையிலான 27 நூல்கள் புதிய ஏற்பாடாகவும் உள்ளது.

இருபத்தேழு நூல்களைக் கொண்ட புதிய ஏற்பாட்டில் உள்ள எபிரெயர் நூலுக்கு ஒரு தனித்துவம் உண்டு. ஏனைய 26 நூல்களுக்குமான ஆசிரியர்கள் மற்றும் அவை எங்கிருந்து எழுதப்பட்டது என்பதற்கான தகவல்கள் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் போது, எபிரெயர் நூலுக்கு இவை சம்பந்தமான தடயங்கள் எதுவுமே இல்லை.

இந்த எபிரெயர் நூலுக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. ஆம், தன் மொழி நடையாலும், அணுகுமுறையாலும் மற்ற புதிய ஏற்பாட்டு நூல்களிலிருந்து வேறுபடுகிறது. 13 அதிகாரங் களையும், 303 வசனங்களையும் கொண்ட இந்நூலை கசக்கிச் சாறுபிழிந்து வடிகட்டினால், ஒற்றை வார்த்தையில் இதன் ஒட்டுமொத்த சாமரம்சமும் அடங்கிவிடும். **ஆம், மேலானது** என்பதே அவ்வார்த்தை. இயேசுவும் அவருடைய காரியங்களும்

மேலானது என்பது காரண காரியங்களோடு விளக்கப் பட்டிருக்கிறது. இயேசு தேவதூதர்களைக் காட்டிலும் மேலானவர் இயேசு, யூதர்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் மோசேயைக் காட்டிலும் மேலானவர், இயேசுவின் பிரமாணம் மோசேயின் பிர மாணங்களைக் காட்டிலும் மேலானது இயேசுவின் ஆசாரியத்துவம் ஆரோனின் ஆசாரியத்துவ முறையைக் காட்டிலும் மேலானது என்பதற்கான வாதங்கள் நேர்த்தியாக அடுக்கப்பட்டிருக்கிறது.

சரி, ஏன் இந்த எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுத வேண்டிய அவசியம் வந்தது? கிறிஸ்துவின் நற்செய்தி இவர்களுக்கு அறிவிக்கப்பட்ட போது, இவர்கள் யூதமதக் கோட்பாடுகளைத் துறந்து கிறிஸ்துவின் உபதேசச் சட்டங் களுக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள். ஆயினும், காலப்போக்கில் மோசேயின் பிரமாணங்களில் வைராக்கியம் கொண்ட சக யூதர்களின் அடக்குமுறைக்கு ஆளாக நேர்ந்துள்ளது. இவர்களுக்குப் புத்தி சொல்லி (எபி 13:22) ஊக்கப்படுத்தும் படியாய் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பூரணராகும்படி கடந்து போங்கள் என்று (எபி 6:1) தூண்டப்பட்டனர்.

இப்புத்திமதிகளை ஏற்று, பூரணத்தை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் தேவனோடு அவர்கள் கொண்டி ருக்கும் உறவு மேம்பாடு அடைய வேண்டும். அதற்குத் தேவை, கிறிஸ்து இயேசுவைப் பற்றிய சரியான பார்வை. **இப்படியிருக்க பரம அழைப்புக்கு பங்குள்ளவர்தகளாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவை கவனித்து பாருங்கள்** (**எபி.**3:1) என்று. இயேசுவைப் பற்றிய இரண்டு உண்மைகள் இவ்வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 1. இயேசு அப்போஸ்தலர் 2. இயேசு பிரதான ஆசாரியர். முதல் நூற்றாண்டுக் காலத்தில் தேவன் அப்போஸ்தலர் மூலமாகவே மனிதர்களிடம் பேசினார். பழைய ஏற்பாட்டு மோசேயின் முறைமையின்படி ஆசாரியர்கள் மூலம் தான் ஜனங்கள் தேவனிடத்தில் சேர முடிந்தது.

இப்பேருண்மையை ஏற்றுத் தங்கள் பக்தி வாழ்வை முன்னெடுத்துச் செல்லும் போது, எந்த இடத்திலும் சறுக்கி விடக்கூடாது என்று கருதி தன்னுடய தர்க்க ரீதியான வாதங்களுக்கு இடையே தேவையான இடங்களில் **எச்சரிப்புகளையும்** கொடுக்கிறார். ....இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருப்போமானால்

தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்? (2:4) ....உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் (3:8) ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே ( எபி 10:31) என்ற இந்த எச்சரிப்புகளெல்லாம் அவர்களை மிரட்டுவதற்கு அல்ல. மாறாக, ஏற்றுக் கொண்டதில் உண்மை யாயும், உறுதியாயும் இருக்கும்படி உற்சாகப்படுத்துவதற்குகே. ஆம், வசனம் 35-ஐப் பாருங்கள். **ஆகையால் மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டு விடாதிருங்கள்** (எபி 10:35) என்கிறார். இப்படியாக, அவர்களின் ஆன்மீக உணர்வைத் தட்டி எழுப்பினதற்குப் பிறகு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் அவர்களுக்கு நினைப்பூட்டி, நீதிக்குத் தலைவணங்கினால் வருகையில் தப்பித்துக் கொள்ள முடியும், தவறினால் எல்லாமே பாழ் என்று ஓங்கி ஒரு போடு போடுகிறார் (எபி 10:37-39).

இப்படிப் பத்தாம் அதிகாரம் முடிய கிறிஸ்துவும், கிறிஸ்தவமும் மேலானது என்பதற்கான காரணங்களைப் புரியும்படியாக எடுத்து வைத்தும், தேவையான இடங்களில் அவர்கள் உணர்வடையும் படியான எச்சரிப்புகளைக் கொடுத்தும் இந்த எபிரெயர் ஆசிரியருக்கு **அப்பாடா இது போதும்** என்று நினைக்க முடியவில்லை. இவர்கள் பின்மாற்றம் அடையாமல் தடுப்பதற்கு வேறு ஏதாவது சொல்ல முடியுமா என்று எண்ணுகிறார். எப்பொழுதுமே இந்த எபிரெயர்களுக்குத் தங்கள் முன்னோர் களைப் பற்றிய பெருமை உண்டு. அவர்கள் பற்றிய சிறப்புகளை எடுத்துச் சொன்னால், மெய் மறந்து கேட்பார்கள். அவர்களின் இந்த எண்ண ஓட்டத்தைச் சரியாக நாடி பிடித்துக்கொண்ட ஆசிரியர் இந்த எபிரெயர்கள் பெரிதும் மதிக்கும் 16 விசுவாச வீரர்களை அவர்கள் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்துகிறார். அவர்கள் பக்தி வாழ்வைத் தத்ரூபமாக அவர்கள் கண்களுக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தி ஏறெடுத்துப் பார்க்க வைக்கிறார்.

இப்படியாக, இந்த விசுவாச வீரர்களை ஏற, இறங்கப் பார்த்து அவர்களின் பக்திப் பற்று பற்றிய பெருமிதத்தில் மிதந்து கொண்டிருக்கும் போது, இந்தப் **பதினோராம்** அதிகாரத்தை எப்படி முடிக்கிறார் என்று பாருங்களேன். **இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகதபடிக்கு, விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக**

**நியமித்திருக்கிறார்** (எபி 11:39,40) என்று. ஆஹா! புரிகிறதா? எபிரெயர் ஆசிரியரின் அணுகுமுறை. நீங்கள் ஆச்சரியப்பட்டுப் பிரமித்து நிற்கும் இப்பெரும் பக்தர்களைவிட நீங்கள் பாக்கிய சாலிகள், நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். எப்படியெனில், **வாக்குத்தத்தம் செய்யபட்ட இயேசுவை** அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. நீங்களோ பெற்றிருக்கிறீர்கள். நீங்கள் பூரணராகும் வரை அவர்கள் பூரணராக முடியவில்லை. அப்படியானால், யார் பாக்கியசாலிகள்? நீங்களே அவர்களைக் காட்டிலும் **மேலானவர்கள்.**

அவர்கள் இப்படிப் பூரித்துப் போகும்படியான ஓர் அலாதியான மனநிலையில் அவர்களை இழுத்துக் கொண்டு போய் நிறுத்தி விட்டு, அப்பூரிப்பு சிந்தையிலிருந்து விடுபடுவதற்கு முன் அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள **ஓட்டம்** பற்றிப் பேசுகிறார். ஓட்டம், பந்தயம், பந்தய சாலை, அரங்கம் இவை களெல்லாம் எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு அந்நாட்களில் புதிது அல்ல. போட்டிகள் நடக்கும் போது பார்வையாளர்கள் சுற்றிலும் அமர்ந்து போட்டிகளை ரசித்து, போட்டியாளர்களை ஊக்கப்படுத்துவார்கள். வீரர்களுக்கு அறிமுகமானவர்களும் குடும்பத்தாரரும், தாங்கள் மதிக்கும். பிரபலங்களும் பார்வை யாளராக அரங்கில் அமர்ந்து இருந்தால், சம்பந்தப்பட்ட வீரர்களுக்கு ஒரு புதிய உத்வேகம் கிடைக்கும்.

இதை மனதில் கொண்டவராக மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க ...விசுவாசத்தைத் துவக்குகிற வரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி 12:1) என்கிறார். அதாவது, எபிரெயக் கிறிஸ்தவர்களே, நீங்கள் எப்படி ஓடுகிறீர்கள் என்பதை நீங்கள் போற்றும் ஏனோக்கு, நோவா போன்றவர்களும், நீங்கள் பெருமையோடு பார்க்கும் ஆபிரகாம், மோசே, தாவீது போன்றவர்களும் பார்வையாளர்களாக அமர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்களே. அவர்களுக்கு முன்பாக நீங்கள் சிறப்பாக செயல்பட்டு வெற்றிக் கொடியை நாட்டுங்கள் என்று உந்தித் தள்ளுகிறார். எப்படி?

சரி, தன் விசுவாச வாழ்வில், இயேசுவை நோக்கி இப்படியாக ஒருவன் ஓடும் போது அவனுக்குக் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று இப்பொழுது கவனிப்போம்.

## I. இயேசுவின் உதவி கிடைக்கிறது.

இயேசுவை நோக்கி ஒரு கிறிஸ்தவன் ஓடும்போது ஒருவருக்குக் கிடைக்கும் நன்மைகளில் ஒன்று இயேசுவின் மூலமான "**உதவி**".

பல நேரங்களில் பல மனிதர்கள் கடினமான பணியை ஏற்றுச் செய்யும்போது, எனக்கு யாராவது கொஞ்சம் உதவி செய்தால் கூட இக்காரியத்தைச் சுலபமாக முடித்துக் காட்டுவேன் என்று சொல்லுவார்கள். ஆம், தடுமாறும் நேரங்களில் வெளியிலிருந்து கிடைக்கும் ஆதரவுக்கு அவ்வளவு வலிமை உண்டு. அதுபோலவே, ஒரு கிறிஸ்தவனின் பரலோக ஓட்டத்திற்கும் உதவி தேவைப்படுகிறது. விசுவாச ஓட்டம் எப்பொழுதுமே சவாலான ஒன்று. சவாலானதே தவிர முடியாத ஒன்றல்ல. முடியாத ஒன்றை நாம் செய்ய வேண்டுமென்று தேவன் ஒருபோதும் எதிர்பார்க்கமாட்டார். ஆயினும், விசுவாச ஓட்டம் பாடுகளும், பாரங்களும் நிறைந்த ஒன்று என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆயினும், இச்சவாலான நிலைக்குத் தங்களை உட்படுத்துகிறவர் களுக்கு தேவன் எப்பொழுதும் ஆதரவாகவே இருந்து வருகிறார். சங்கீதம் 46:1 இவ்விதம் கூறுகிறது. **தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்** என்று. இதைவிட, இந்த எபிரெயக் கிறிஸ்தவர்களை விசுவாசத்தில் நிலை நிறுத்தப் பெரும் முயற்சிகளை ஆவியின் பெலத்தால் எடுக்கும் ஆசிரியர், **ஆதலால் அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.** [எபி2:18] என்று எடுத்துரைக்கிறார். அதாவது, இயேசுவை நோக்கிய உங்கள் ஓட்டத்தில் இயேசுவின் உதவி உண்டு என்று உத்திரவாதம் தருகிறார். இயேசுவின் உதவி இருக்குமானால் அங்கு வெற்றி நிச்சயம். ஏனெனில், அவர் சிலுவையில் வெற்றி கண்டவர். [கொலோ 2:15].

அருமையானவர்களே, நம்முடைய விசுவாச ஓட்டம் எப்படிப் பட்டதாயிருக்கிறது? யாருடைய உதவியோடு நடக்கிறது? அதற்கு முன்பாக ஒருகேள்வி. நாம் விசுவாச ஓட்டத்தை முதலில் துவக்கி விட்டோமா? எபிரெயக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டு கிறிஸ்துவின் உபதேச கேட்பாடுகளுக்கு ஒப்புக் கொடுத்துத் தங்கள் விசுவாச ஓட்டத்தை துவக்கியவர்கள்.

இப்படிப்பட்டவர்கள் பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி ஓடும் போது தான் **அவருடைய உதவி** கிடைக்கும். பந்தய சாலைக்கே வராமல் இயேசுவின் உதவி எனக்கும் உண்டு என்று எண்ணி நாம் ஏமாந்து போகக் கூடாது. ஆகவே, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசச் சட்டங்களுக்கு நம்மைக் கீழ்ப்படுத்தாமலிருந்தால், முதலில் நாம் நம்மைக் கீழ்ப்படுத்தி, கிறிஸ்தவ ஓட்டத்தைத் துவக்கி, இயேசுவை நோக்கி அவருடைய உதவியோடு ஓடி பரம கானானைச் சுதந்தரிப்போம்!

## II. **இயேசுவின் சமாதானம் கிடைக்கிறது.**

இயேசுவை நோக்கி ஒரு கிறிஸ்தவன் ஓடும் போது ஒருவருக்குக் கிடைக்கும் நன்மைகளில் மற்றொன்று, இயேசுவின் மூலமான **சமாதானம்.**

நாம் வாழும் இன்றைய உலகின் தலையாயத் தேவை சமாதானம் தான். ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் என்று அரசாங்கங்கள் கருதினாலும், சமாதானமே அத்தியாவசியத் தேவையாக உள்ளது. ஆம், மனிதர்களின் சூது மதியால் மானிடம் கூறுபோடப்பட்டு, பகையுணர்வையும், வெறுப்பு ணர்வையும் வளர்த்து சமாதானத்தை எட்டாக்கனியாக்கி விட்டார்கள். ஆம், பாவங்களும், வேறு பலவிதமான தேவ விரோத அக்கிரமச் செயல்களும் பாவத்தைப் பார்க்கக் கூடாத சுத்தக் கண்ணனாகிய தேவனுக்கும் (ஆ:1:13) செம்மையானவனாக இருக்க வேண்டுமென்ற நோக்கில் படைக்கப்பட்ட மனிதனுக்கும் இடையே பிரிவினையை உண்டாக்கிவிட்டது. பாவம் சமாதானத்தை இழக்கும்படி செய்துவிட்டது. ஆயினும். மனிதன் தனக்கான சமாதானத்தை இயேசுவில் பெற்றுக் கொள்ள முடியும் என்று இயேசுவானவர் பூமிக்கு அனுப்பப்படுவதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பாகவே முன்னுரைக்கப்பட்டுள்ளது. நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். அவர் **சமாதானம் பிரபு** என்று (ஏசாயா 9:6).

இயேசுவைப்பற்றி முன்னுரைக்கப்பட்டபடியே, இயேசு ஆண்டவர் இப்பூமிக்கு வந்து ஊழியம் செய்த நாட்களில் சமாதானத்தை வாக்களித்தார். **சமாதானத்தை உங்களுக்கு** வைத்துப் போகிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்கமலும் பயப்படாமலும் இருப்பதாக (யோவா 14:27). இப்படி

வாக்களித்த சமாதானத்தை இயேசு எப்படி சாத்திய மாக்கினார்? பவுலடியார் இது பற்றி கொலோசெயருக்கு எழுதும் போது, அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார் என்று. [கொலோ 1:20] இயேசுவின் மூலம் கிடைக்கும் இச்சமாதானம் பற்றி பின்னாளில் ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது பவுல் இவ்விதம் குறிப்பிடுகிறார். **இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்** என்று [ரோமர் 5:1]

ஆம், இயேசுவானவர் சிந்தின இரத்தத்தினாலேதான் இது சாத்தியம். அப்படியானால், ஒருவன் இயேசுவின் இரத்தத்தோடு எப்படித் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்? அதற்கான ஒரே வழி ஞானஸ்நானம்தான். மத்தேயு 26:28 **பாவமன்னிப்பு** இயேசுவின் புது உடன்படிக்கைக்கான இரத்தத்தின் மூலம் என்றும், அப். 2:38– ல் **பாவமன்னிப்பு** ஞானஸ்நானத்தின் மூலம் என்றும் சொல்லுகிறது. ஆக, ஞானஸ்நானமே இயேசுவின் இரத்தத்தோடு ஒருவருக்குத் தொடர்பை ஏற்படுத்துகிறது. ஒருவன் விசுவாசித்து, மனந்திரும்பி இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்காக ஞானஸ் நானத்திற்கு ஒப்புக் கொடுக்கும்போது, இயேசுவின் மூலமான சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான். புரிகிறதா? இயேசுவை நோக்கிய நம் பரலோக ஓட்டம் இப்படிச் சமாதானத் துடன் கூடிய ஓட்டமாக இருக்கும்படி நாம் பார்த்துக் கொள்வது அவசியம்.

### III. இயேசுவின் பெலன் கிடைக்கிறது.

இயேசுவை நோக்கி ஒரு கிறிஸ்தவன் ஓடும்போது ஒருவருக்குக் கிடைக்கும் நன்மைகளில் இன்னுமொன்று இயேசுவின் மூலமான "**பெலன்**"

பெலன் என்பதற்கான பொதுவான பொருள், சரீரப் பிரகார மான நிலையில் திடகார்த்தமாக இருப்பது. பழைய ஏற்பாட்டு சிம்சோனை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இன்னொரு வகையான பெலன் ஆவிக்குரிய ரீதியில் கிடைப்பது. இதற்கு உதாரணமாக, அப்போஸ்தலன் பவுலடியார் பெற்றுக் கொண்ட பெலனை நாம் கூறமுடியும். தான் மிகவும் நேசித்த பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு எழுதும் போது, **என்னைப் பெலப் படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு** என்று எழுதுகிறார். [பிலி:4:13] இதே விதமாகத்தான் பழைய ஏற்பாட்டு தாவீதும் கூறியுள்ளார். நான்

கூப்பிட்ட நாளிலே எனக்கு மறு உத்தரவு அருளினீர்; என் ஆத்துமா விலே **பெலன்** தந்து என்னைத் தைரியப்படுத்தினீர். [சங் 138:1].

ஆக, பெலன் என்பது சரீரபெலன், ஆத்துமா பெலன் என்று வேதாகமத்தால் பிரித்துப் பேசப்படுகிறது. சரீர பெலனுக்கு தேவனுடைய வார்த்தைகள் எப்பொழுதும் முக்கியத்துவம் தருவதில்லை. ஏனெனில், இப்பெலன் பூமியின் வாழ்வோடும், சரீர அழிவோடும் முடிந்து போகக் கூடியது. ஆத்தும பெலனை கிறிஸ்தவர்கள் பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவர் மூலம் பெற்றுக் கொள்கிறார்கள். நீ பயப்படாதே, நான் உன்னுடனே கூட இருக்கிறேன்.. நான் உன்னைப் பெலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். [ஏசா 41:10]. **கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று.. என்னைப் பலப்படுத்தினார்.** [II தீமோ 4:17]. நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமை யாய் **பலப்படவும்....** வேண்டிக்கொள்கிறேன் [எபே 4:16].

அருமையானவர்களே! பிலி 4:13 ல், பவுலடியார் என்னைப் பெலப்படுத்தும் கிறிஸ்து என்று சொல்லும்போது, ஏதோ கிறிஸ்து வானவர் பவுலை மாத்திரம் அல்லது பவுல் போன்றவர் களைத் தான் பெலப்படுத்துவார் என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. பவுலடியார் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றியது போல நாமும் பின்பற்றினால் [கொரி 11:1] கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தைகளையும், பாடுகளையும் ஏற்றுக் கொண்டு, நற்சாட்சியுள்ள பக்தி வாழ்வை நடத்தினால், நிச்சயம் நம்மையும் பெலப்படுத்து வார். இதில் எவ்வித சந்தேகமும் தேவையில்லை. கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு நாம் கீழ்படியா விட்டால், அவரை நோக்கிக் கூப்பிடும் போது நம்மை நிச்சயம் பெலப்படுத்தமாட்டார்.

இதில் இன்னும் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், இவ்வசனத்தைப் பாருங்கள். **இது முதல் நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திர மல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத்தந்தருளுவார்.** [II தீமோ 4:8] **எனக்கு மாத்திரமல்ல** என்று சொல்லப்பட்டுள்ளதை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள். எனவே, நாம் ஒவ்வொரும், அப்போஸ்தலன் பவுல் போல, கிறிஸ்துவின் அழைப்புக்கும், கிறிஸ்துவின் நற் செய்திக்கும் நம்மை ஒப்புக்கொடுத்து நம்முடைய பரலோக பயணத்தை இயேசுவை நோக்கி நடத்தத் தீர்மானிப்போம்.

தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக! ஆமென்!! ✝

## கிறிஸ்தவர்களாகிய...

- நாம் உலகத்தார் நடந்து கொள்வது போல நடந்து கொண்டு மற்றவர்களுக்கு இடறலாக இருக்கக்கூடாது.
  மத். 18:7.

- நாம் இவ்வுலகத்தில் நம் ஜீவனை சிநேகிக்கக்கூடாது.
  யோவான் 12:25.

- நாம் இப்பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கப் பட்டவர்களைப் போல் வாழ வேண்டும்.
  கலா. 1:4.

- நாம் உலகத்தில் சுடர்களைப் போல் பிரகாசிக்க வேண்டும்.
  கலா. 6;14

- நாம் உலகத்தால் கறைபடாத வாழ்க்கையை வாழ வேண்டும்.
  யாக் .1:27.

## வளரும் சபைக்கான அடையாளங்கள்

- வளரும் கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையையும் உயர்த்திப் பிடிக்கிறது II தீமோத்தேயு 4: 2-4; அப்போஸ்தலர் 20: 27

- வளரும் சபை விசுவாசிகளுக்கு தேவனுடைய வார்த்தையை கற்பிக்கும் திட்டத்தைக் கொண்டிருக்கும். (II பேதுரு 3:18; எபேசியர் 4:12)

- வளரும் சபை மூப்பார்களை கொண்டிருக்கும் (I தெசலோனிக்கேயர் 5:10 13; I தீமோத்தேயு 3:1-7)

- வளரும் சபை இழந்து போனவர்களுக்கு போதிக்கவும் விருந்து போனவர்களை மீட்டமைக்கவும் முயற்சி எடுக்கிறது (அப்போஸ்தலர் 5:2; கலாத்தியர் 6:12)

# பாவ மன்னிப்பு

Bro. J.C. **சோட்**

மனிதன் பாவியாயிருக்கிறான் என்று வேதாகமம் சொல்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையில், அவன் தேவ நம்பிக்கையற்ற, நிலைக்குத் தள்ளப்படுகிறான். மனிதன் இந்நிலையிலேயே மரிக்க வேண்டுமா? ஒருவேளை அப்படி மரித்தால் அவன் நித்திய நித்தியமாக இழந்துபோவான். இது ஒரு பயங்கரமான நிலை. இருந்தபோதிலும் இதுதான் உண்மையா யிருக்கிறது.

மனிதன் பாவியாயிருக்கிறபடியால், அவன் தன் பாவத்தைக் குறித்து உணர்வுள்ளவனாயிருந்து, அப்பாவத்திலிருந்து நிவர்த்தி பெற்று, பாவமன்னிப்பைப் பெற, பல்வேறு வழிகளைத் தொடர்ந்து எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறான். இது உலகளாவிய பிரச்சனை யாயிருக்கிறது. ஆனால், ஜனங்கள் பல்வேறு விதங்களில் இதற்குத் தீர்வு காண முயற்சிக்கிறார்கள். சிலர் தங்கள் பாவங்களிலிருந்து நிவர்த்தி பெற மிருக பலிகளைச் செலுத்து கிறார்கள். தங்கள் சரீரங்களை வருத்திக் கொள்கிறார்கள். இன்னும் சிலர், பாவ மன்னிப்பைப் பெற நற்கிரியைகளில் ஈடு படுகிறார்கள் அல்லது உலகத்திலிருந்து தங்களைத் தனிமைப் படுத்திக்கொண்டு தங்கள் ஆத்துமாக்களுக்கு சமாதானத்தைத் தேட முயற்சிக்கிறார்கள். ஆனால், இந்த நம்பிக்கைகள், நடைமுறைகள் தவறானவைகளாக இருக்கிறபடியால் அவைகள் ஒருபோதும் மனிதனுடைய பாவங்களைப் போக்க முடியாது.

இருந்தபோதிலும், தேவன் நாமெல்லோரும் இரட்சிக்கும் படி தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளும் அளவுக்குத் தம்முடைய அன்பைப் பொழிந்தருளினார் [யோவான் 3:16,17; ரோமர் 5:8]. இயேசு கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரிக்க மனமு வந்து வந்தார். அவர் மனித இனத்துக்காக இதைச் செய்ய விரும்பினபடியால், மனிதன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்பதைத் தீர்மானிக்க அவருக்கு மாத்திரமே அதிகாரம் உண்டு. அந்தத் தீர்மானங்கள் என்ன? வசனங்களைக் கவனியுங்கள்.

- ***ஒருவர் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும்*** *[யோவான் 8:24]*
- ***ஒருவர் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும்*** *[லூக்கா 13:3].*
- ***ஒருவர் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும்*** *[மத்.10:32,33].*
- ***ஒருவர் பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் என்னும் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்*** *[மாற்கு 16:16 அப்.2:38].*

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதிகளில் தேவனுடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியும்போது, நமக்கு பாவ மன்னிப்பு கிடைக்கிறது. கர்த்தர் நம்மை இரட்சிக்கிறார். ஆகவே, நாம் நம் கடந்த கால பாவங்களிலிருந்து என்றென்றும் மன்னிக்கப் படுகிறோம்.

பாவம் அழிவை ஏற்படுத்தக் கூடியது. அது நம்மைப் பாடாய்ப்படுத்தி முடிவில்லாத மனவலியைக் கொண்டு வந்து, இறுதியில் நமக்குப் பெருத்த சோகத்தை ஏற்படுத்துகிறது. ஆனால், இரட்சிப்பால் நம் பாவங்கள் மன்னிக்கப்படும், முற்றிலுமாக அகற்றப்படும், என்றென்றும் எடுத்துப் போடப்படும் என்பது எவ்வளவு அருமையான ஆறுதலாக இருக்கிறது. நமக்கு ஓர் இரட்சகர் இருக்கிறார், அவருடைய பெயர் இயேசு கிறிஸ்து. நாம் அவரை விசுவாசத்தோடு நோக்கிப்பார்த்து அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியும்போது அவர் நம்முடைய இரட்சகராக இருக்கிறார்.

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்பது உங்கள் பதிலானால், உங்களை இரட்சிக்க வல்ல இயேசு கிறிஸ்துவினிடத்தில் நீங்கள் திரும்பவில்லையென்றால் இழந்து போன நிலையில் தான் தொடர்ந்து இருப்பீர்கள். மாறாக, கீழ்ப்படிதல் மூலமாக நீங்கள் அவரிடத்தில் திரும்பும்போது, அவர் உங்களை இரட்சித்து அவருக்குச் சொந்தமாக மாற்றி விடுவார். அதன்பிறகு, கடந்தகாலப் பாவங்கள் கழுவப்பட்டது என்கிற நிம்மதியோடும், மன சமாதானத்தோடும் அந்தப் பரமக் கானானை அடையும் வரை தொடர்ந்து தேவனைப் பின்பற்ற முடியும். ✝

பெண்கள் பகுதி

# வேத வினா, விடை

Sis. ரேச்சல் இராஜநாயகம்

அன்பான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதம் வேதத்திலிருந்து சில வினாக்களை எடுத்து அதற்கு விடையும் கொடுத்துள்ளோம். இது நம் வேத அறிவை பெருக்கிக் கொள்ள பேருதவியாக இருக்கும்.

## வேதாகமம்

1. வேதத்தின் இரண்டு பெரிய பிரிவுகள் என்னென்ன?
பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு.

2. ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை புத்தகங்கள் உள்ளன?
39–27 மொத்தம் 66

3. முதல் புத்தகங்கள் எப்பொழுது எழுதப்பட்டன?
சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன்பு

4. அப்புத்தகங்களை யார் எழுதியது?
மோசே

5. எப்பொழுது கடைசி புத்தகம் எழுதப்பட்டது?
சுமார் கிபி 96.

6. யார் அதை எழுதியது?
அப்போஸ்தலனாகிய யோவான்.

7. தேவனால் ஏவப்பட்டு வேதாகமத்தை எழுதினவர்கள் எத்தனை பேர்?
சுமார் 40

8. ஆதியாகமத்திற்கும், வெளிப்படுத்தின விசேஷம் எழுதினதற்கும் இடையே காலாவதியான வருடங்கள் சுமார் எத்தனை?

9. வேதாகமத்தில் முரண்பாடுகள் உள்ளதா?
இல்லை.

10. ......., ....... அருளப்பட்டிருக்கிறது, தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் ............, ..........., ............., நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. [II தீ: 3:16,17]

## முதல் குடும்பம்

11. முதல் மனிதன் யார்? ஆதாம்.
முதல் பெண் ? ஏவாள்

12. அவர்கள் எங்கு வாழ்ந்தார்கள்?
ஏதேன் தோட்டத்தில்

13. முதல் மரணம் எது?
தேவன் விலங்குகளைக் கொன்று அவைகளின் தோல்களை உரித்தது.

14. விலங்குகள் ஏன் கொல்லப்பட்டன?
ஆதாமுக்கும், ஏவாளுக்கும் உடைகளை உண்டு பண்ண தேவன் அவைகளை பயன்படுத்தினார்.

15. மனிதனுடைய சரீரத்தைப் பற்றிய தேவனுடைய கரிசனையைக் குறித்து இச்சம்பவம் என்ன சொல்லுகிறது?
மனிதன் தன் சரீரத்தை தகுதியாய் வைத்துக் கொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

16. அவர்களின் மூன்று பிள்ளைகளின் பெயர் என்ன?
காயீன், ஆபேல், சேத்.

17. முதல் கொலையாளி யார்?
காயின்

18. ஆதியாகமம் 14–ம் அதிகாரத்தின்படி விலங்குகளை பாதுகாத்தல், விவசாயம் போன்றவற்றை ஆதி குடும்பத்தார் போற்றி வந்தார்கள். அவர்கள் ஆற்றிய பிற பணிகள் என்னென்ன?

பட்டணங்களை கட்டினார்கள், இசைக்கருவிகளைத் தயாரித்தார்கள், பித்தளை, இரும்பு போன்ற உலோகங்களை உண்டு பண்ண கற்றுக் கொடுப்பவர்களாகவும் இருந்தார்கள்.

19. இந்த காலம் என்ன பெயரால் அழைக்கப்பட்டது?
முற்பிதாக்களின் காலம்.

20. ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி:1:1). அவர் அதை ஆறு நாளில் செய்து முடித்தாரா? அல்லது பரிணாமக் கொள்கையை அவர் பயன்படுத்தினாரா?
இல்லை. ஆறு (6) நாளில் செய்து முடித்தார்.

## யார் இந்த மனிதர்கள்?

21. பொறுமையான மனிதனாக இருந்தவன் யார்?
யோபு

22. நீண்ட நாள் வாழ்ந்த மனிதன் யார்?
மெத்தூசலா (969 வருடங்கள்)

23. மிகவும் ஞானமுள்ள மனிதன் யார்?
சாலமோன்

24. பேழையைக் கட்டினது யார்?
நோவா

25. தேவனுடைய சிநேகிதன் என்றழைக்கப்பட்டவன் யார்?
ஆபிரகாம்.

26. இஸ்ரவேலருக்கு கட்டளைகளைக் கொடுத்தது யார்?
மோசே.

27. தேவனுடைய இருதயத்திற்கேற்ற தாசன் யார்?
தாவீது

28. அழுகையின் (புலம்பலின்) தீர்க்கதரிசி யார்?
எரேமியா.

29. சிங்கங்களின் கெபியில் போடப்பட்டவன் யார்?
தானியேல்.

30. இயேசுவின் சிலுவை மரணத்தை அப்படியே தத்ரூபமாக விவரித்த தீர்க்கதரிசி யார்?
ஏசாயா (53)

பிரியமான சகோதரிகளே! மிகவும் பிரயோஜனமாக இந்த கேள்வி – பதில் இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தேவனுடைய சித்தத்தினாலே முதலாவது நாம் கற்றுக் கொண்டு, பிறருக்கும் கற்றுக்கொடுப்போம். மீதமுள்ள கேள்விகளை அடுத்த மாதம் பார்ப்போம். தேவன் அதற்கு உதவி செய்வாராக! ஆமென்!!

# பாரம்பரியங்களின் ஆபத்து

Dr. ஏபில் நாயகம்

**கி**றிஸ்துவின் போதனைகளையும், தேவ ஆவியினாலேயே கொடுக்கப்டபட்ட அப்போஸ்தலரின் உபதேசத்தையும் மையமாக கொண்டிருப்பது தான் கிறிஸ்தவம். கிறிஸ்தவன் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிற எந்த ஒரு நபரும் அதையே தன் பக்தி வாழ்வின் மையமாக கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற உலகின் சூழ்நிலை என்ன? கிறிஸ்தவன் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளுகிறவர்கள் கிறிஸ்துவின் போதனை மற்றும் அப்போஸ்தலர்கள் மூலம் கொடுக்கப்பட்ட உபதேசத்திற்கும், மனிதனுடைய போதனைக்கும் வித்தியாசம் தெரியாமல் திண்டாடுகின்றனர். அதன் விளைவு, சிலர் மனித போதனைகளையே மெய் போதனைகளாக ஏறிறுக் கொண்டு, அதை மையப்படுத்தி தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படி செய்கிறவர்கள் எப்படித் தங்களை கிறிஸ்துவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ள முடியும்? அப்படி செய்பவர்களை ஏன் இப்படி என்று கேட்டால் அவர்கள் சொல்கிற பதில், இது **பாரம்பரியமாக** எங்கள் முன்னோர்கள் காலத்திலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது, அதை நாங்களும் அப்படியே செய்கிறோம் என்று சொல்கிறார்கள். பலர் மெய் சத்தியத்தை முழுமையாக தெரிந்து கொள்வதற்கு இம்மனப்போக்கு தடையாயிருக்கிறது. இதன் மூலம் கிறிஸ்தவன் என்ற அடையாளத்தை பலர் தொலைத்து விட்டார்கள். கொடுமையாதெனில், அதை உணராமல் இருக்கிறார்கள். மனிதனுடைய போதனைகள் பல இன்று இருந்தாலும், குறிப்பாக இந்த மாதத்தில் லெந்து நாட்கள் புனிதவெள்ளி, ஈஸ்டர் போன்ற சிறப்பு நாட்களை கிறிஸ்தவன் அநுசரிக்க வேண்டும் என்பது எழுதாத விதியாகிவிட்டது. ஆநுசரித்தால் நல்ல கிறிஸ்தவன், அப்படி அநுசரிக்காவிட்டால் பலர் புருவங்களை உயர்த்துவதற்கு நாம் காரணமாகிவிடுகிறோம். இது தான் இன்றைய கிறிஸ்தவத்தின் நிலை.

மத் 15:3,6 வசனங்களை நாம் வாசித்தால், நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? என்றும், உங்கள் பாரம்பரியத்தினாலே

தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள் என்றும் வாசிக்க முடியும். எந்த விதமான **வசனங்களின் ஆதாரமும் இல்லாமல்** செய்யப்படும் காரியங்களே காலப்போக்கில் பாரம்பரியங்களுக்கு வித்திட்டது. அப்படியென்றால், அவை மனிதனுடைய யோசனையின்படியும், பல கூட்ட மனிதர்களின் விருப்பத்திற்குகேற்பவும் வேத வசனத்தின் ஆதாரமில்லாமல் தோன்றியவையே ஆகும். தேவனுடைய கற்பனையை மீறி நடக்கிறோம் என்று மத் 15:3 ல் வாசிக்கிறோம். தேவனுடைய கற்பனையை மனிதனுடைய யோசனை களுக்காகவும், மனிதனுடைய விருப்பத்திற்காகவும் மீறுவதற்கு தைரியம் எப்படி வருகிறது? II யோவான் 1:9–ல் கிறிஸ்துவினுடைய உபதேசத்திலேயே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல என்று தெளிவாகவே கொடுக்கப் பட்டிருக்கிறது. பாரம்பரியங்களின் மூலம் உபதேசத்தை மீறுகிறவர்கள் தங்களைத் தேர்ந்த கிறிஸ்தவர்கள் என்று அடையாளப் படுத்திக் கொண்டாலும் அவர்கள் தேவனை உடையவர்கள் அல்ல. இந்த உண்மையை அறியா மலிருப்பதற்கான காரணம், மனிதனுடைய போதனையின் மீது இருக்கும் பற்றும், அதை விரும்பும் மனதும் தான். தேவனுடைய போதனை என்ன சொல்கிறது என்று கேட்பதற்குக் கூட இன்று பலருக்கு மனதில்லை. இப்படி செய்கிறவர்கள் தேவனுடைய கற்பனையை அவமாக்குகிறார்கள். இந்தப் போக்கு சரியா? சிந்தியுங்கள்.

மத் 15: 9, 10 வசனங்களை வாசியுங்கள். 10ம் வசனத்தை முதலில் வாசிப்போம். இங்கே இயேசு கிறிஸ்து ஜனங்களைப் பார்த்துக் **கேட்டு, உணருங்கள்** என்று அறிவுறுத்துகிறார். எல்லாவற்றையும் கேட்க வேண்டும். ஆங்கில வேதாகமத்திலே Hear and Understand என்று எழுதப்பட்டிருக்கிறது. அதன் பொருள் கேட்டு புரிந்து கொள்ள வேண்டும். கேட்கிற காரியங்களை, இது மனிதனுடைய போதனையா, தேவனுடைய போதனையா என்று புரிந்து கொள்ள வேண்டும். கேட்க மட்டும் செய்து அதை செயல்படுத்திக் விடக் கூடாது. அதை **ஆராய்ந்து புரிந்து** கொள்ள வேண்டும். சரி எது, தவறு எது என்பதைத் சீர் தூக்கிப் பார்த்து பின்னர் சரியானதை மட்டுமே செயல்படுத்த வேண்டும். இப்பொழுது 9ம் வசனத்தை வாசிப்போம். மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று வாசிக்கின்றோம். மனுஷருடைய கற்பனைகளை மையமாக வைத்து செயல்படுவோமாகில் நாம் தேவனுக்கென்று என

நினைத்துச் செய்யும் காரியங்கள் அனைத்துமே **வீண்** என்று இயேசு கிறிஸ்து சொல்லுகிறார். எனவே தான், சொல்லப்படுவதைக் **கேட்டு** அதன் பின்பு சரி எது, தவறு எது என்று **புரிந்து** கொள்வதே நற்செயலாகும். இதை இன்று எத்தனை பேர் செய்கிறார்கள்? பாரம்பரியங்களை ஆராய்ந்து பார்க்கவே தயங்குகிறார்கள். தேவனுடைய வார்ததைக்கு கூட அவ்வளவு பயமும், பற்றுதலும் இருக்குமா என்று தெரியவில்லை. பாரம்பரியங்கள் மீது அப்படி ஒரு பற்று. இது சரியா?

நாம் பின்பற்றும் உபதேசத்தைப் பொறுத்தவரை பாரம் பரியங்களுக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் பாரம் பரியத்திற்கும், தேவனுடைய போதனைகளுக்கும் சமமான இடத்தை கொடுத்திருக்கிறார்கள். உண்மைக் கிறிஸ்தவன் அப்படி செய்வதில்லை. செய்யவும் கூடாது.

பிரியமான வாலிபரே! இந்த உண்மையை அறியாமலிருக்கிற பலரை நாம் சந்திக்க நேரிடும். அவர்களுக்கு இதைச் சொல்லி புரிய வைப்பது நம் கடமையாகும். அவர்கள் செய்யும் வீணாண ஆராதனையை தேவனுக்கேற்ற ஆராதனையாக மாற்ற நாம் உதவுவோம்.

தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!! ✝

---

## குழந்தை வளர்ப்பு

**பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு முகத்தையும் உடலையும் சுத்தமாக வைத்திருக்க கற்றுக் கொடுக்கிறார்கள்.**

**ஆனால் வேதாகமத்தை கற்றுக்கொண்டு அதற்கு கீழ்ப்படிய குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதில்லை. இதன் மூலம் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு ஆத்துமாவை பெரியதென்றும் கொல்லாமல் சொல்கிறார்கள்**

சிறுவர் பகுதி

# காணாமல் போன ஆடு

Dr. பிரெய்ஸி

**ஹ**லோ! பிள்ளைகளே, எல்லோரும் தேவனுடைய கிருபையில் சுகமாக இருப்பீர்களென நம்புகிறேன். கடந்த மாதம் நான் உங்களுக்கு சொன்னபடி, **விசுவாசத்தோடு ஜெபிப்பீர்களென** நம்புகிறேன். இந்த மாதம் லூக்கா 15:3–7 ல் இயேசு கிறிஸ்து சொன்ன காணாமல் போன ஆடு பற்றிய உவமையை உங்களுக்கு சொல்லப் போகிறேன்.

ஒரு மேய்ப்பன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து அவைகளில் ஒன்று காணமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்திரத்தில் விட்டு, காணாமல் போன ஆட்டைத் தேடிக்கொண்டு போவது போல, பிள்ளைகளே! நம் தேவனும் நம் தீய செயல்களால் அவரை விட்டு விலகி நாம் போகும் போதும் அல்லது தவறான நட்பில் சிக்கித் தேவனை விட்டு விலகிப் போகும் வேளையிலும் நம் தேவன் எப்படி அந்த மேய்ப்பன் தன் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டு விட்டு காணாமல் போன ஓர் ஆட்டைத் தேடி அலைகிறானோ அதுபோல், வழி தவறிப்போன நம்மையும் அன்போடு தேடி வருகிறார். லூக்கா 15:7–ல் உள்ளபடி எப்படி அந்த மேய்ப்பன் காணாமல் போன ஆட்டைக் கண்டுபிடித்தவுடனே சந்தோஷம் அடைகிறானோ அதுபோல நம் தேவனும் தவறான வழிசென்ற நாம் மனந்திருந்தி தேவனிடத்தில் திரும்பி வரும் போது மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்.

ஆகையால், பிள்ளைகளே! நாமும் நம் தவறுகளுக்கும், பாவங் களுக்கும் வருந்தி தேவனிடம் மன்னிப்பு கேட்டு நீதியின் பாதைக்குத் திரும்பி தேவ பக்தியுள்ள வாழ்க்கையை நடத்த வேண்டும். அப்படிச் செய்தால், நம்மை உண்டாக்கின தேவன் நம்மைப்பற்றி மகிழ்ச்சி அடைந்து, நம்நிமித்தம் பெருமை அடைவார். நம்மை இதற்காக ஆசீர்வதிப்பார். சரியா!

அன்புடன்
பிரெய்ஸி அக்கா! ✝

## சிறுவர்களுக்கான வேத வினா ...

### லூக்கா 15-17 அதிகாரங்கள்

1. பரிசேயரும், வேதபாரகரும் இயேசுவைக் குறித்து என்ன சொன்னார்கள்?

2. அங்கே எத்தனை ஆடுகள் இருந்தது?

3. எத்தனை ஆடுகள் காணாமல் போயின?

4. காணாமற் போன ஆட்டைக் கண்டவுடன் மேய்ப்பன் என்ன செய்தான்?

5. காணாமற் போன ஆட்டைக் கண்டவுடன் எவ்வாறு மகிழ்ச்சி அடைந்தான்?

6. ஒரு பாவி மனந்திரும்பும் போது தேவன் என்ன செய்வார்?

**சரியான பதில் எழுதியவர்களில் சிலர்**

| | |
|---|---|
| B. பெனிட்டா டென்னி சாரோன் | - காங்கயம் |
| K.J. ஜேஸ்பர் பிரின்ஸ் | - காங்கயம் |
| K.J. கிங்ஸ் லி ரூபஸ் | - காங்கயம் |
| J. சகாய புஷ்பராஜ் | - மணப்பாறை |
| R. எக்லிசியா | - காரைக்கால் |

## சோர்ந்து போகும் நேரங்களில்

- பெலனுக்காக தேவனுடைய வசனத்திற்கு திரும்ப வேண்டும் (எரேமியா 20:9)
- சங்கீதம் 73 -யை வாசித்து அங்கே சங்கீதக்காரன் சொல்வதை கற்றுக்கொள்ள வேண்டும்.
- சோதனை மூலமாகத்தான் வளர்ச்சி ஏற்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். (யாக்கோபு : 1:24).

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன், அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை ஏப்ரல் மாத இதழில்)**

## I நாளாகமம் புத்தகத்தில் தேடிக்கண்டுபிடியுங்கள் (10-20 அதிகாரங்கள்)

1. இஸ்ரவேலின் மூப்பரெல்லாரும் எங்கே வந்தார்கள்?
2. தாவீதை எதின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள்?
3. எந்த நதி கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது?
4. தேவனுடைய பெட்டி எங்கேயிருந்து கொண்டுவரப்பட்டது?
5. தேவனுக்கு ஊசா மேல் ஏன் கோபம்மூண்டது?
6. தீருவின் ராஜாவின் பெயர் என்ன?
7. பெலிஸ்தர் எங்கே பரவியிருந்தார்கள்?
8. தாவீது தான் எப்படிப்பட்ட வீட்டிலே வாசம் பண்ணுகிறதாகச் சொல்கிறார்?
9. சோபாவின் ராஜாவினுடைய பெயர் என்ன?
10. தாவீதின் சகோதரன் பெயர் என்ன?

## பிப்ரவரி மாத வினாக்களுக்கான விடைகள்

1. பாரேஸ், எஸ்ரோன், கர்மீ, ஊர், சோபால் *(4:1)*
2. தல்மா *(3:2)*
3. ரூபன் *(5:1)*
4. பசான் தேசத்திலே *(5:11)*
5. எருசலேமிலே *(6:32)*
6. நூரன் *(7:27)*
7. ஆயிரத்து எழுநூற்று அறுபது *(9:13)*
8. நாலு திசைகளிலும் *(9:24)*
9. இஸ்ரவேலரோடே *(10:1)*
10. பட்டயத்தை நட்டு அதின் மேல் விழுந்து இறந்தான் *(10:4).*

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| M.D. ரவிச்சந்திரன் | - | சென்னை |
| மீனா ஆறுமுகம் | - | சென்னை |
| M. செல்வம் | - | கோவை |
| தே. தனம் பேன்ஸி | - | கள்ளக்குறிச்சி |
| J. ஜான்சி | - | ஆனைமலை |
| M.K. இம்மானுவேல் ராஜா | - | சென்னை |
| V.S.S. பால்ராஜ் | - | மதுரை |
| G. பாக்ய சம்பூரணம் | - | ஈரோடு |
| D. சமாதானராஜா | - | கள்ளக்குறிச்சி |
| C. அருள்ராஜ் | - | சென்னை |
| Mrs. வசந்தா செல்வராஜ் | - | கள்ளக்குறிச்சி |
| பாலாமணி | - | காங்கயம் |
| ராமசந்திரன் | - | காங்கயம் |
| செல்வமணி குணசேகரன் | - | சென்னை |

# யூதாஸ்

Bro. K. M. *பிலிப் -பவானி*

அன்பானவர்களே! யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து யூதாஸைக் குறித்து சிந்திப்பது நம் கிறிஸ்து வாழ்க்கையையும், பரலோக வாழ்வையும் தக்க வைத்துக்கொள்ள பெரிதும் உதவியாயிருக்கும் என்று விசுவாசிக்கிறேன். இயேசு இப்பூமிக்கு இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்த அரிய பெரும் நல்வாய்ப்பை அசட்டை செய்து, அற்பப் பணத்தின் மீது கவனம் வைத்து யூதாஸ் துரோகியானான் என்று பார்த்தோம். இவன் இயேசுவோடு கூடவே 3½ ஆண்டுகள் வாழ்ந்தும், இவன் ஏன் இயேசுவுக்குத் துரோகியானான்? இவனுக்கு அகோர மரணம் ஏன் ஏற்பட்டது? இயேசு இவனைக் குறித்து, அந்த மனுஷனுக்கு **ஐயோ!** அவன் பிறவாதிருந்திருந்தால் நலமாயிருக்குமே என்று சபிக்கின்ற சஞ்சலப்பட்டு பரிதவிக்கின்ற நிலைக்கு யூதாஸ் தள்ளப்பட்டது ஏன்? இக்கேள்விகளை உன்னிப்பாய் உற்று நோக்குவோம். இந்நிலை நமக்கு நேரிடாமல் இருக்க நம்மை நாமே நிதானிப்போம். நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான் [நீதி 14:2] என்பதன்படி நாம் யாராயிருப்பது நல்லது என்பதை நிதானித்தறிவோம்

**நிதானம் -**I : யூதாஸ் வெளித்தோற்றத்தில் இயேசுவோடு இருந்தானே தவிர,உள்ளான மன அளவில் இயேசுவிடம் தன்னை முழுமையாய் ஒப்புக் கொடுக்கவில்லை. யோவா:8:31- ன் படி இயேசுவின் உபதேசத்தில் நிலைத்து நிற்கும் உண்மையான சீஷனாயிருக்கவில்லை. எல்லாவற்றையும் விட்டுவந்தவன் எல்லாத்தீமைக்கும் வேரான பண ஆசையை விட்டுவரவில்லை [1தீமோ 6:10] இயேசுவுக்கே இருதயத்தில் முழு இடம் கொடுக்க வேண்டியவன், சாத்தான் உள்ளே புகுமளவு இடத்தை திறந்தே வைத்திருந்தான் [யோ 13:27] என்பதே நிதானிக்க வேண்டிய ஒன்றாகும். ஒருமுறை லாசருவின் சகோதரி மரியாள் தன் வீட்டிற்கு வந்த இயேசுவின் பாதங்களில் விலையேறப்பெற்ற தைலத்தை பூசி, தன் தலைமயிரால் துடைத்தாள். அப்பொழுது யூதாஸ் இந்தக் தைலத்தை முந்நூறு பணத்திற்கு விற்று,

**இருதயத்தின் கேடான சிந்தனையை அறிந்த பரிசுத்த ஆவியானவர்,** அவன் தரித்திரரைத் குறித்து கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியாலும், பணப்பையை... சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான் என்று அவனது மாய் மாலத்தை வெளிப்படுத்துகிறார் (யோ 12:1-8). இருதயத்தின் நிறைவுதான் வாய் பேசும் என்பது எவ்வளவு சரியாயிருக்கிறவினால்

அன்பானவர்களே! நாமும் ஞானஸ்நானத்தில் நம்மை முழுமையாய் ஒப்புக்கொடுத்து கிறிஸ்தவனாய் வாழ்ந்து கொண்டிருந்தாலும், காலப்போக்கிலே எவனை விழுங்கலாமோ என்று வகைத் தேடிச் சுற்றித்திரியும் பிசாசுக்கு இடம் கொடுத்து விடுகிறோம். இங்கு நாம் நிதானிக்க வேண்டியது 1. சத்தியத்தைக் கேட்பதோடு அதன்படி நடப்பதில் மிகக்கவனம் செலுத்த வேண்டும். 2. திராட்ச்சைச் செடியாகிய கிறிஸ்துவில் கொடியாக நிலைத்திருந்து மிகுந்த கனிகளைக் கொடுக்கிறவர்களாயிருக்க வேண்டும் (யோவான்.15:55). அழைக்கப்பட்ட அழைப்பிற்கு பாத்திரவான்களாய் நடந்து கொள்ள வேண்டும். தேவனே, **என்னை ஆராய்ந்து, என்னை சோதித்து, என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்** என்று தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து சாத்தானை விரட்டுவோம்.

**நிதானம்** : II தொடர்ந்து சரித்திரத்தைக் கவனித்தால் யூதாஸ்தான் பிரதான ஆசாரியரிடத்தில் வலியச் சென்று இயேசுவைக் காட்டிக் கொடுப்பதில் ஈடுபட்டான் (மத் 26:14). அவனுள் புகுந்த சாத்தான் செயல்பட வழியைத் திறந்து கொடுத்தான். இதை அறிந்த இயேசு உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்றார். பதினொரு சீஷரும் துக்கத்தோடு நானோ! நானோ என்றார்கள். 12 - வது ஆளாக வஞ்சகன் யூதாசும் **நானோ** என்கிறான். மாய்மாலம் செய்வதில் எவ்வளவு துணிகரம் என்று பாருங்கள். தேவக் கற்பனைகளை உண்மையாய் நேசிக்க ஒப்புக் கொடுத்த நம் வாழ்க்கையில் மாய்மாலம், தவறு போன்ற காரியங்கள் செய்ய துணிகரம் வேண்டாம். வேதம் சுட்டிக்காட்டும் பொழுதே நாம் நம்மைத் தாழ்த்துவோம். தாவீது, சகேயுவைப் போல நம் பாவ நிலையை அறிக்கையிடுவோம், விட்டுவிடுவோம் (நீதி 28:13). இரக்கம் பெற்று இனிதே வாழ்வோம். யூதாஸ், உள்ளொன்று (சாத்தானை)

வைத்து, புறம் ஒன்று (சீஷர்களிடம்) பேசுகிற பெலவீனனானான். மனுஷருடைய மாயத்தை தேவன் அறிவார். அக்கிரமத்தை அவர் கண்டும் கவனியாதிருப்பாரோ (யோபு 11:11) என்கிற வசனத்தின் படி தேவபயமற்றவனாய் மாய்மாலத்தில் மாய்ந்து போனான். காரணம் அவனுக்குள் புகுந்த பிசாசு. ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்வான். நாங்கள் (பிதா, குமாரன்) அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம் என்று இயேசு வாக்குக் கொடுக்கிறார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ண விரும்பும் இடத்தில் சாத்தானுக்கு இடம் கொடுக்கலாமா? பரிசுத்தமான, பரவசமான பரலோக வாழ்வை இழக்கலாமா? நிதானிப்போம். நிலையான, சமாதான, சந்தோஷமான வாழ்வை இப்பூமியிலும், பரத்திலும் அனுபவிப்போம்.

**நிதானம்** III – ஒருவரையும் இழந்து போக விரும்பாத இயேசு நிதானிக்கும்படி ஒரு நல்ல வாய்ப்பை மீண்டும் யூதாசுக்குக் கொடுத்தார். கெத்சமனே தோட்டத்தில், இரவில் இயேசுவை கட்டிக் கொடுக்க யூதாஸ் ஒரு கூட்டத்தைக் கூட்டி வந்தான். இதைத் தெரிந்தும் இயேசு யூதாஸை நோக்கி **சிநேகிதனே** என்று அன்போடு அழைத்தார். (மத் 26:50). சீஷனே! என்பது கூட குருவுக்கு சற்று கீழான நிலைதான். ஆனால், இயேசுவோ சிநேகிதனே! என்று அழைத்துத் தனக்குச் சமமான **கௌரவத்தைக்** கொடுத்தார். யூதாஸ் சற்று நின்று, நிதானித்து இம்மாபெரும் அன்புள்ள அழைப்புக்கு தன்னை அடிமைப் படுத்தியிருந்தால், அவனும் பேதுருவைப் போல், யோவானைப் போல் இன்றும், உலகம் உள்ளளவும் உலகில் சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருப்பான். **சிநேகிதனே** என்ற இந்த அன்பின் அழைப்பு யூதாஸின் இருதயத்தை உடைத்து விடாதபடி, மனந்திரும்பாத படி, நிதானிக்காதபடி, உள்ளே ஊடுருவி இருந்த சாத்தான் தன் வசமாக பிடித்து வைத்திருந்தான். மூடனாக, முரடனாக உணர்வற்றவனாக இருந்த யூதாஸின் இருதயம் இருளடைந்தது. நாம் கூட, தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று ( சபை கூடி) மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரி யாமலும் (கீழ்படியாமலும்) இருந்து நம் சிந்தனைகளினாலே வீணர்களாகாத படி நிதானித்தறிகிறவர்களாயிருப்போம். ரோம.1:21). சிநேகிதனே என்று கனிவோடு அழைத்த இயேசுவை முத்தத்தினால் காட்டிக் கொடுத்து, சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனை உள்ளவைகள் (நீதி 27:6) என்பதை யூதாஸ்

நிரூபித்துவிட்டான். ஆம் சாத்தானுக்கு நம் இருதயத்தில் இடம் கொடுத்து விட்டு நாம் நினைக்கின்ற பேசுகின்ற, செய்கின்ற ஒவ்வொரு செயலும் தவறாகவே தான் இருக்கும். அது தீமையையே கொண்டு வரும். ஒரு குடத்தில் சிறிதளவு விஷம் இருந்தால் அதற்குள் ஊற்றப்படும் பால் அனைத்தும் விஷமாகவே மாறிவிடும். ஒவ்வொரு நாளும் இருதயத்தை சத்தியத்தினாலே பரிசுத்த மாக்குவோம் (யோவான் 17:17) தொடர்ந்து நான் உமக்கு விரோதமாய் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன் என்று தாவீதைப் போல் உறுதியான முடிவெடுப்போம் ( சங் 119:12). ஏனெனில், அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியில் நாசமடைவான் (நீதி 29:1) என்பதை நாம் நிதானிக்கும்படி யூதாஸை வேதம் நமக்கு முன் நிறுத்தியுள்ளது.

**நிதானம்** IV: யூதாஸ் அரம்பத்திலிருந்தே இயேசுவை அறிகிற விதமாய் அறிந்து கொள்ளத் தவறிவிட்டான். இயேசுவைப் போதகராக, அற்புதராக, குற்றமில்லாதவராக, தேவக்குமாரனாக, அறிந்தானே தவிர, மன்னிக்கிறவர் என்பதை முற்றிலும் மறந்துவிட்டான். மாய்மாலத்தின் மூலம் பெற்றுக் கொண்ட அநீதத்தின் கூலியை அநுபவிக்க முடியாது என்பதற்கு யாக்கோபு, கேயாசி, அனனியா சப்பிராள் வரிசையில் யூதாஸ் இடம் பெற்றான். கூலியைப் பெற்ற யூதாஸ், இயேசு மரணாக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபப்பட்டான் (வருந்தினான்). இங்கேயும் கூட தேவன் யூதாஸ்க்கு நிதானித்து நிமிர்ந்து நிற்கக் கூடிய ஒரு கடைசி வாய்ப்பைக் கொடுத்தார். அவன் இயேசுவோடு வாழ்ந்த வாழ்க்கையை பின்னோக்கிப் பார்த்து இயேசு மன்னிக்கிறவர் என்பதை உணர்ந்து, நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப் பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராய் இருக்கிறார் (I யோவான் 1:9) என்பதை நிதானித்து மனந்திரும்பி இயேசுவைத் தேடி சிலுவையின் அருகில் வந்திருந்தார். ஆண்டவரே அடியனை நினைத்தருளும்! என்று கடைசி நேரத்தில் மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி இயேசுவை நோக்கி விண்ணப்பித்த சிலுவைக்கள்ளன் இயேசுவோடு பரதசீல் வாழும் வாய்ப்பைப் பெற்றது போல (லூக்கா. 23:39-43). மூன்றாண்டுகள் அல்ல நித்திய நித்தியமாய் இயேசுவோடு வாழும் வாய்ப்பை யூதாஸ்

பெற்றிருந்திருப்பான். பேதுருவும் சில தவறுகள் செய்தான். அவை தற்செயலாக , உணர்ச்சிப் பெருக்கால், பயத்தால் செய்த தவறுகள். ஆனால், சுட்டிக்காட்டியவுடனே உணர்ந்து மனந்திரும்பினான். ஆனால், யூதாஸோ நீண்ட காலமாய், திட்டமிட்டு பாவம்செய்தான். ஆம், திட்டமிட்டு பாவம் செய்தல் துணிகரத்தையும், மனக்கடினத்தையும் ஏற்படுத்தும். யூதாஸ் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்ப முடியாமல், மனக்கடினத்தால் இயேசுவோடு தனக்கு இருந்த இடத்தை இழந்து போனான் அப்:1:20.

அன்பான தேவ ஜனமே! நிதானிப்போம். யூதாஸைப் போல் சாத்தானுக்கு இடம் கொடுத்து, மாய்மாலம், திட்டமிட்டு பாவம் செய்து, மனந்திரும்ப வாய்ப்பே இல்லாமல் இயேசுவோடு சிங்காசனத்தில் வாழும் இடத்தை இழந்து போகாமல் காத்துக் கொள்வோம் (வெளி 3:21). நம்மை நாமே நிதானித்து திட்டமிடு வோம். சத்தியத்திற்கு செவி சாய்க்க, நன்மை செய்ய, சபை வளர்ச்சியடைய, தேவனைப் பிரியப்படுத்த, பரலோக வாழ்வை சுதந்தரித்துக் கொள்ள திட்டமிட்டு உறுதியோடு செயல்படுவோம். ஜெயக்கிறிஸ்து நம்மோடிருக்கிறார். ஜெயம் பெறுவோம். ஆமென்!!

## மனுஷனுடைய நாட்கள்

- நம் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது (யோபு 7:6)
- நம் நாட்களை எண்ண கற்றுக்கொள்ளவேண்டும் (சங்கீதம் 90:12)
- கொஞ்ச காலந்தோன்றி பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறது (யாக்கோபு 4:14).

# கிறிஸ்து என்னும் மார்க்கம்

J. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார்

## சிருஷ்டிப்பு

அன்புள்ள திருமறை ஆசான் வாசகர்களுக்கு நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தேவன்: அநாதியாய் என்றென்றைக்கும் தேவனா யிருக்கிறார். அவருக்கு ஆரம்பமும், முடிவும் இல்லை. மேலும் அவர் மாறாதவராயிருக்கிறார், சங். 90:2; மல். 3:6. இவரே எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். Iகொரி 8:6. அதேபோல் ஆண்டவராயிருக்கிற இயேசு கிறிஸ்துவும் மாறாதவரா யிருக்கிறார். எபி 13:8. இவர் மூலமாக சகலமும் உண்டாக்கப் பட்டது. 1கொரி 8:6; கொலோ 1:16; யோவா 1:1–3. இது போலவே பரிசுத்த ஆவியானவருக்கும் ஆரம்பம், முடிவும் சொல்லப்படவில்லை. இவரும் சிருஷ்டிப்பதில் பங்கு உடையவராயிருக்கிறார். யோபு 33:4.

பிதா,குமாரன், பரிசுத்த ஆவியானவர்களாகிய இவர்களை வேதம் அநேக இடங்களில் தேவன் (God) என்று சொல்லுகிறது. இந்த தேவன் என்ற வார்த்தைக்குள்ளாக பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார்கள் I யோவா. 5:7.

தேவன் வானம், பூமி மற்றும் அவைகளிலுள்ள எல்லா வற்றையும் உண்டாக்கினதிலே இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. விஞ்ஞானிகள் பூமியின் வயது (பூமி தோன்றிய திலிருந்து இன்று வரை) சில கோடி ஆண்டுகள் இருக்கும் என்று சொல்லுகிறார்கள்.

ஆனால், வேத ஆராய்ச்சியாளர்கள் கிறிஸ்துவுக்கு முன் ஏறக்குறைய 4000 (நான்காயிரம்) ஆண்டுகள், கிறிஸ்துவுக்குப் பின் சுமார் 2000 (இரண்டாயிரம்) ஆண்டுகள் ஆக உலகம் தோன்றி மொத்தம் ஏறக்குறைய 6000 (ஆராயிரம்) ஆண்டுகள் தான் ஆகிறது என்கிறார்கள்.

விஞ்ஞானிகளுடைய கருத்துக்கு வலு சேர்க்கும்படியாக சிலர் இப்படி விளக்கம் சொல்லுகிறார்கள்.

தேவன் வானம் பூமியைப்படைத்த பிறகு ஆழத்தின் மேல் இருள்இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது என்று வேதம் சொல்லுகிறது. (ஆதி.1:2) இந்த ஆதி.1:2-ன் வசனத்தின் படி ஆவியானவர் எத்தனை கோடி ஆண்டுகள் தண்ணீரின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் என்பது தெரியாது, ஒரு வேளை விஞ்ஞானிகளின் கருத்துக் கணிப்பின்படி ஒரு கோடி ஆண்டுகளாக இருக்கலாம் என்கின்றனர்.

ஆனால், யாத். 20:11-ல் கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்று எழுதப்பட்டிருப்பதால், கர்த்தர் ஆறு நாளிலே வானம் பூமி உட்பட எல்லாவற்றையும் படைத்து விட்டார் என்றும், வானம் பூமியின் சிருஷ்டிப்பின் நாள் தொடங்கி இன்று வரை ஏறக்குறைய 6000 ஆண்டுகள்தான் ஆகிறது என்கிறார்கள்.

தேவன் மனிதனை அவருடைய சாயலாகவும், ரூபத்தின் படியேயும் படைத்தார். ஆதி.1:26 ஆண், பெண் இருபாலரையும் அவருடைய சாயல், ரூபத்தின் படியே சிருஷ்டித்தார் ஆதி.1:27. இந்த தேவனுடைய சாயல் அல்லது ரூபம் என்னவென்பதை நாம் கடந்த டிசம்பர் மாதம் கட்டுரையில் பார்த்தோம். சாயல் என்பது எபேசி.4:24 ல் நீதியும் பரிசுத்தமுமாக சொல்லப்பட்டுள்ளது. ரூபம் என்பது ரோமர். 12:2-ல் மனம் (இருதயம்) என்பதாக சொல்லப்பட்டுள்ளது. மேற்சொன்ன இரண்மே மற்ற சிருஷ்டிப்புகளுக்கு தேவன் கொடுக்கவில்லை. இதிலிருந்து தேவன் மனிதனை எந்த அளவிற்கு மதிப்புள்ளவனாக வைத்திருக்கிறார் என்பது விளங்கும். தேவ சாயல் மனிதனுக்கு இருப்பதால் மனிதர்களால் மட்டுமே பரலோகம் செல்ல முடியும். மற்ற சிருஷ்டிகள் பரலோகம் செல்ல இயலாது.

ஆனால், பரலோகம் செல்ல இன்றைக்கு நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் புதிய ஏற்பாட்டுக் கட்டளையின்படி வாழ்ந்து, கிறிஸ்துவுக்குள்ளான நீதி, பரிசுத்தம் உள்ளவர்களாக நம் வாழ்க்கையை நிறைவு செய்ய வேண்டியது அவசியமா யிருக்கிறது. அப்படியில்லாமல் புதிய ஏற்பாடு கொஞ்சம், பழைய ஏற்பாடு கொஞ்சம், உலக பாரம்பரியம் கொஞ்சம், மனித கற்பனைகள் கொஞ்சம், தம் சொந்த ஞானம் கொஞ்சம் என முழு விசுவாச மற்ற வாழ்க்கை வாழுவது பரலோகம் செல்வதற்கு

தடையாயிருக்கிறது. இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்பவர்கள் நித்திய ஜீவனைப் பெற முடியாது. பரலோகம் சென்று தேவனோடு வாழ இயலாது என புதிய ஏற்பாட்டு சத்தியம் தெளிவாக போதிக்கிறது. 2கொரி 2:17 ஆகையினால் புதிய ஏற்பாட்டை மட்டும் கடைபிடிக்க வேண்டும் என திட்டமாக போதிக்கிறோம்.

## குடும்பம்

தேவன் மனிதனுக்காக ஏற்படுத்தின திட்டங்களில் குடும்பம் என்பதும் முக்கியமானது. தேவன் மனிதனை படைக்கும்போது அவனை அவருடைய சாயலிலும் ரூபத்திலும் படைத்தார் என்று பார்த்தோம். ஆகையால் மனிதர்களிடத்தில் தெய்வீக சிந்தனை மற்றும் வாழ்க்கையை தேவன் எதிர்பார்த்தார். அது அவருடைய உரிமை. 1 பேது. 1:16. இந்த மண்ணான பூமியிலே வாழுவதற்கு மண்ணான உடல் அவசியம் என திட்டமிட்டு சரீரத்தை மண்ணினாலே உண்டாக்கினார். ஆதி. 2:7 இந்த மண்ணான சரீரம் பரலோகத்தில் அவசியமில்லை. அந்த மண்ணான சரீரத்திற்குள் உள்ளான மனிதனை சிருஷ்டித்தார். ஆதி 2:7; 2கொரி. 4:16. இந்த உள்ளான மனிதனை **ஆவி** என்றும் வேதாகமம் கூறுகிறது. சகரி 12:1; பிரச. 12:7. இப்படி ஆதாம் என்கிற ஒரு மனிதனைப் படைத்து, அவனை அவனுக்காக உண்டாக்கின தோட்டத்திலே அதை பண்படுத்த அவனை அங்கே வைத்தார், ஆதி. 2:8,15.

பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்கு வேன் என்றார். ஆதி. 2:18. இப்படி சொன்ன தேவன், ஆதாமை உண்டாக்கியது போல் மீண்டும் பூமியின் மண்ணை எடுத்து ஒரு பெண் உருவத்தை உண்டாக்கவில்லை. அதற்குப் பதிலாக தாம் உண்டாக்கின மனுஷனிலிருந்து ஒரு விலா எலும்பை எடுத்து, அதை மனுஷியாக (பெண்ணாக) உருவாக்கி, அந்த பெண்ணை மனுஷனிடத்தில் (ஆதாமினிடத்தில்) கொண்டு வந்தார் (ஆதி.2:21.22).

இங்கே நாம் தேவனுடைய செயலை கவனிக்க வேண்டும். தேவன், மீண்டும் மண்ணை எடுத்து ஆதாமை உருவாக்கியது போல பெண்ணையும் (ஏவாளையும்) உருவாக்கியிருந்தால் ஒரு குடும்பத்தில் ஆணும் தலையாயிருந்திருப்பான், பெண்ணும் தலையாயிருந்திருப்பாள். சரீரமேயில்லாமல் இரண்டு தலைகள் மட்டும் ஒன்றாயிருந்தால் அது எப்படியிருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். அப்படியில்லாமல் தலை ஒருவராகவும்

(ஆணாகவும்) சரீரம் ஒருவராகவும் (பெண்ணாகவும்) தேவன் படைத்தார். தேவன் உண்டாக்கின மனித உடல் (தலை+சரீரம்) அநேக காரியங்களுக்கு உதாரணமாயிருக்கிறது. அப்படி தேவன் மனித சரீரத்தை வடிவமைத்தார். குடும்பத்திற்கு, சபைக்கு, ஒரு நிர்வாகத்திற்கு இப்படி எத்தனையோ காரியங்களுக்கு உதாரணமாயிருக்கிறது மனிதனுடைய சரீரம்.

ஆகையால், பெண் உன்னைப்போலதான் என்னையும் தேவன் படைத்தார் என்று சொல்வதை விட உன்னிலிருந்து என்னைப் படைத்தார் என்றுதான் சொல்ல வேண்டும் என்று தேவன் திட்டமிட்டார். ஆதி.2:23; 1கொரி. 11;8,9;1 தீமோ. 2:13. ஒரு ஏற்றதுணை எப்படியிருக்க தேவன் விரும்பினார் என்றால்: அவள் எந்தக்காரியத்திலேயும் தங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபேசி. 5:24).

அவள் புத்தியுள்ள ஸ்திரியாக வேண்டும். நீதி. 14:1; குணசாலியான ஸ்திரீயாயிருக்க வேண்டும். நீதி. 31:10; தெளிந்த புத்தி, விசுவாசம், அன்பு, பரிசுத்தம் போன்றவற்றில் நிலை கொண்டிருத்தல் வேண்டும். 1தீமோ. 2:15; நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும். 1தீமோ.3:11; அவர்கள் நற்சாட்சி பெற்ற வாழ்க்கை வாழ வேண்டும். 1தீமோ. 5:10; மேலும் கற்புள்ள நடக்கையுள்ளவர்களாய் ஆவிக்குரிய இருதயத்தில் மறைந்திருக்கிற அழியாத அலங்கரிப்பாகிய நற்குணங்களைக் கொண்டவர்களாய் இருக்க வேண்டும். 1பேது. 3:1-6. இன்னும் அநேகம் சொல்லலாம்.

உள்ளான மனதிலே, மீட்பிலே பாவ மன்னிப்பிலே, இரட்சிப்பிலே, நித்திய ஜீவனிலே, பரலோக வாழ்க்கையிலே ஆண் பெண் வித்தியாசம் இல்லை. இவைகளிலே இருவரையும் தேவன் சமமாகப் பார்க்கிறார். கலா. 3:28.

ஆதாமினுடைய சரீரத்திலிருந்து ஏவாள் உருவாக்கப்பட்டபடியால் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று வேதம் கூறுகிறது. ஆதி. 2:24; மத். 19:14-6. அப்படிக் கூறுவதற்கான திட்டத்தை தேவன் சிருஷ்டிப்பிலே உண்டாக்கினார். இரண்டு அல்லது மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட விலா எலும்புகளை எடுத்து இரண்டு அல்லது மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையுள்ள பெண்களை துணையாக உருவாக்கவில்லை.

அதற்கு மாறாக ஒரேயொரு எலும்பை எடுத்து ஒரேயொரு பெண்ணை உண்டாக்கி அந்த ஒரு ஆணுக்கு அவன் உடம்பிலிருந்து எடுத்த அந்த ஒரு பெண்ணை துணையாகக் கொடுத்தார். மனிதனுடைய ஒரு பக்கத்து எல்லா விலா எலும்புகளையெல்லாம் எடுத்துவிட்டால் அவனுடைய நிலைமை என்னவாயிருக்கும் யோசித்துப் பாருங்கள்.

ஒருவனுக்கு ஒரு மனைவி மட்டும்தான் என்கிற தீர்மானத்தின்படி தேவன் சிருஷ்டிப்பிலேயே உறுதிசெய்தார். கையினால்தான் சபையை கண்காணிக்கக் கூடிய மேய்க்கக்கூடிய மூப்பர்களும் ''ஒரே மனைவியை உடைய புருஷனாயிருக்க வேண்டும்'' என்று தேவன் திட்டம் செய்தார். 1 தீமோ 3:2. ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகள் உள்ளவர்கள் சபையில் ஓர் உறுப்பினராகக் கூட சேர்க்க முடியாது. தேவன் இப்படிப்பட்டவர்களை அங்கீகரிக்க மாட்டார். ஆகவே தேவன் அங்கீகரிக்காத அல்லது அவர் ஏற்றுக் கொள்ளாத ஒரு காரியத்தை அவருடைய ஊழியக்காரனோ அல்லது சபையோ செய்யக் கூடாது. ✝

## நாளும் நடப்பும்

- யெஸ் வங்கி விவகாரத்தால் பங்கு சந்தையில் கடும் வீழ்ச்சி
- நாடு முழுவதும் 110 ரயில் நிலையங்கள் உலகத்தரம் வாய்ந்தவைகளைக் மாற்றப்படும் – இந்திய ரயில்வே
- இளம் விஞ்ஞானி திட்டத்தின் கீழ் பள்ளி மாணவர்களில் மாநிலத்திற்கு மூன்றுபேர் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்படும் – இஸ்ரோ
- வரும் ஏப்ரல் 1 முதல் இந்தியாவில் எல்லா வாகனங்களுக்கும் BS6 தொழில் நுட்பம் கட்டாயம்
  – மத்திய அரசு
- கொரானோ வைரஸ் காரணமாக உலகெங்கும் லட்ச கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக் கணக்கானோர் பலியாகியுள்ளனர்.

# கொரோனா கொள்ளை நோய்

Bro. **பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும், சமாதானமும் உண்டாவதாக. சீன நாட்டில் ஆரம்பித்த **கொரோனா வைரஸ்** கொள்ளை நோய் உலகமெங்கும் பரவி கடைசியில் நம் தேசத்திலும் வந்துவிட்டது என்கிறார்கள். இக்கட்டுரை அதைப்பற்றி விளக்குவது அல்ல. கொள்ளை நோயை தேவன் ஏன் அனுமதித்தார். அந்தக் கடவுளுக்கு ஈவு இரக்கமில்லையா என்போர் பலருண்டு. அதைக் குறித்த சில வேதக்காரியங்களை ஆராய்ந்து பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம். தேவன் இரக்கமுள்ளவர் தான், அதில் சந்தேகமில்லை. நல்லவர் என்பதிலும் கருத்து வேறுபாடில்லை. காரணம் இவ்வுலகத்தை படைத்த தேவன், ஒவ்வொரு நாளும் அது நல்லது என்று கண்டார் என்றே ஒவ்வொரு நாளின் படைப்பும் முடிவடைந்தது.

ஆக, யாவற்றையும் மனிதனின் நன்மைக்கென்றே உண்டாக்கிய தேவன் கொடிய கொள்ளை நோயை எப்போது உலகத்தில் அனுமதித்தார்? ஆபிரகாமை தெரிந்து கொண்ட தேவன் அவன் சந்ததி நானூறு வருஷம் அடிமைப்படுவது, பின்பு விடுதலையாவது முதற்கொண்டு அவனுக்கு முன்னறிவித்தார். (ஆதி 15:13 அந்தத் திட்டத்தின்படி தம்மை ஆராதிக்க ஜனங்களை அனுப்ப மறுத்த பார்வோனையும், எகிப்திய ஜனங்களையும் கண்டித்து தம் வல்லமையை வெளிப்படுத்தவே முதன் முதலாகக் கொள்ளை நோயை தேவன் எகிப்தியர் மீது வரவிட்டார். யாத் 9:3–6 ல் மகா கொடிதான கொள்ளை நோய் பற்றியும், அதை அனுமதித்தவர் எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் என்றும் வாசிக்கின்றோம். இப்போது நாம் அறிந்த பெரியம்மை வியாதி போன்றவை எகிப்தில் தான் முதன் முதலில் வந்ததாக வேதத்தில் காண்கின்றோம். எரிபந்தமான கொப்புளங்கள் எகிப்தியருக்கும், மிருகங்களுக்கும் வந்ததாக காண்கிறோம்.

கொள்ளை நோய் வர முக்கியக் காரணம் மனிதன் தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நடப்பதே. சீன நாட்டில் கிறிஸ்தவ வேதத்தை யாரும் பயன்படுத்தக்கூடாது என்ற சட்டம் உள்ளது! தேவனை எதிர்க்கத் துணிந்த எவரும் அவருடைய வல்லமைக்கு முன்பாக மண்டியிட்டே ஆக வேண்டும். என் கட்டளைகளை வெறுத்து உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து என்

கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்களாகில் நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால், கண்களை பூத்துப்போக பண்ணவும், இருதயத்தைத் துயரப்படுத்தவும், திகிலையும், ஈளையையும், காய்ச்சலையும் உங்களுக்கு வரப்பண்ணுவேன் (லேவி26:15,16). தேவன் மனிதனுக்கு தந்திருக்கும் வாதைகளை மேற்கண்ட வசனங்களில் விளக்கப்பட்டிருப்பதை கவனியுங்கள். கட்டளை, நியாயங்கள், கற்பனைகள் இவை அனைத்தும் சேர்ந்த உடன்படிக்கையே தேவனுடைய வார்த்தை அடங்கிய வேதமாகும். அதை மீறிப் போகும் போது பழிவாங்கும் பட்டயமாக தேவன் கொள்ளை நோயை அனுமதித்தாக லேவி 26:25-28- ல் வாசிக்கின்றோம்.

எனக்கன்பான தேவ பிள்ளைகளே, தேவன் இஸ்ரவேல் ஜனத்தோடே பண்ணின உடன்படிக்கையை மீறின போது அவர்களைத் தண்டித்தார். கிறிஸ்து மூலம் தேவன் நம்மோடு ஞானஸ்நானத்தில் உடன்படிக்கை செய்திருக்கிறார். I பேது 3:21) ஆக, நாமும் இஸ்ரவேலரைப் போல் அசட்டையாய் இராதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டியது அவசியம். மேலும், சங் 17:14- ல் தம் வல்லமையை விளங்கப்பண்ணும்படி எகிப்தியரை தண்டித்ததாக காண்கிறோம். தேவ வல்லமையை குறிக்க ஆபகூக்3:5- ல் அவருக்கு முன்பாகக் கொள்ளை நோய் சென்றது. அவர் அடிகளிலிருந்து எரிபந்தமான காய்ச்சல் புறப்பட்டது என வாசிக்கின்றோம். உபா 28:21- ல் அவருக்குச் செவி கொடாத ஜனங்களை கொள்ளை நோய் பிடித்துக் கொள்ளும் என்கிறார். தாவீது தன் சேனை வீரரை எண்ணத் துணிந்து மூன்று நாள் கொள்ளை நோய் தாக்குதலால் 70,000 பேரை இழந்து போனான்.

ஆகவே, நாம் மேட்டிமை தவிர்த்து, நமக்குச் சகல நன்மைகளையும் தரும் தேவனுடைய வல்லமையை புரிந்து நடக்க வேண்டும். சபை கூடுதலை தெய்வ பயத்தோடே அநுசரிக்க வேண்டும் ( I ராஜா 8:37). இது போன்ற சூழ்நிலை வரும் போது அவரையே அண்டிக்கொண்டு சுகம் பெற வேண்டும். நமக்கு நோய் தாக்காமல் காக்கும் சக்தியை மருத்துவர் நோய் எதிர்ப்பு சக்தி IMMUNITY - என்று அழைக்கின்றனர். ஆனால், வேதத்தில் அந்த சக்தியை தேவனே பெருகச் செய்வதாகக் காண்கிறோம். சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார். ஏசா 40:29. அவருக்கே இயேசுவின் மூலம் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்!!